42

ஆகஸ்ட் 84

50 காசு

மாத இதழ்

# சுடர்



நமது 38-வது
சுதந்திரதினம்
15-8-1984

உன் தாயைக்கொல்லும் இந்த வறுமையிலிருந்து
உன்னையேனும் காப்பேனா?

FREE E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,


# கேட்க வேண்டிய கேள்விகள்

**கடுக்கன் காவி அணியும் ஆந்திர முதலவர் ராமராவ் பண ஆசையைத் துறந்தவரா?**

சமீபத்தில் வருமான வரி அதிகாரிகள் ராமராவ் இல்லத்தில் சோதனை நடத்திய போது, தான்நடித்த சூப்பர்மேன் படத்திற்கு ரூ 1500/- மட்டுமே பெற்றுக் கொண்டதாகக் கூறினார். ஆனால் படத்தயாரிப்பாளரது கணக்கை சோதனையிட்டபோது ராமராவ் அப்படத்திற்கு ரூ7,45,000 பெற்றுள்ள விவரம் வெட்ட வெளிச்சமாயுள்ளது.

**உலக அமைதிக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும், சில வல்லரசுகளின் கபட நாடகம் எத்தகையது.**

இத்தகையது :—



**"7வது மனிதன்" இயக்குநர் ஹரிஹரன் இன்னொரு நல்ல படத்தை இந்த மசாலா பட சாக்கடைகளுக்கு நடுவில் நமக்கு அளிப்பாரா? அல்லது மசாலாவில் அவரும் விழ்வாரோ?**

"என்னால் மறந்தும் கூட மசாலாப்படங்களை எடுக்க முடியாது. எடுக்கத் தெரியாது. ஏன் முதலில் அப்படிப்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## செஞ்சிக்கோட்டை அவலம்!

சமீபத்தில் நான் காஞ்சீபுரத்தில் இருந்து திருவண்ணா மலை வரும் வழியில் செஞ்சியில் அமைந்திருக்கும் கோட்டையைக் காணவேண்டும் என்று இறங்கினேன். மலை மேல் அமைந்திருக்கும் பெருங்கோட்டையைக் காணவேண்டும் என்ற ஆவலில மலை அடிவாரத்திற்கு வந்தும் திடுக்கிட்டேன். அங்கு ஒரு டிக்கட் கவுண்டர் இருந்தது. பூட்டியிருந்தது அது. ஆள் நடமாட்டம் என்பதே எங்கும் இல்லை பிறகு நனே மலைமேல் ஏறி, கோட்டையைக் கண்டேன். மலைக்கோட்டை மேலிருந்து கீழே காண்பதற்கு, அருமையாக இருந்தது. செஞ்சி என்றாலே ஞாபகத்துக்கு வரும் தேசிங்குராஜன் கோட்டையை இன்னும் அழகுபடுத்தி, பொதுமக்கள் கவனத்தை ஈர்த்து (இன்னும் இக்கோட்டை இருப்பதே பலருக்குத் தெரியாது) பூட்டி வைத்திருக்கும் டிக்கட் கவுண்டரைத் திறந்து, நினைவுச் சின்னங்களை காக்கிறேன் என்ற சொல் வெறும் வாயளவில் இல்லாமல் செயலுக்கு கொண்டுவர அரசு முன் வருமா?

—நா. செந்தில் முரளி, கோவை-2

பட்ட எண்ணமே எனக்கு எப்போதும் வராது. இதில் என்றும் உறுதியாக இருப்பேன்'' என்று சமீபத்தில் பேட்டியளித்த ஹரிஹரன், மண்டைக்காடு மீனாட்சிபுர சம்பவங்களை அடிப்படையாக வைத்து 'கண்ணீர்புகை' என்ற படத்தை எடுத்து வருகிறார்.

சாகித்திய அகடாமி பரிசு பெற்ற சில திரம்மிக்க தரமான எழுத்தாளர்கள் இந்த சாகித்திய அகடாமியின் அவலத்தைத் துணிவாக விமர்சிப்பார்களா?



சாகித்திய அகடாமி பரிசு கிடைப்பதற்கு முன் அதை மிகக்கடுமையாக விமர்சனம் செய்து கர்ஜித்த ஜெயகாந்தன் கூட, பரிசு வாங்கிய பின், அந்த அமைப்பை எதிர்த்து 'மியாவ்' என்று கூட முணுமுணுக்கவில்லையே!

FREE E- BOOKS , www.thamizham.net.,

## வழக்கமாக இல்லாமல், அதிகார வர்க்கத்தின் நெஞ்சில் தைப்பது போன்ற புதிய போராட்ட முறை ஏதேனும் வெற்றியளித்துள்ளதா?

உண்ணாவிரதம், சத்தியாகிரகம், தர்ணா, மறியல் என்றுதான் போராட்டங்களைக் கேட்டிருப்பீர்கள்! வாழை நடும் போராட்டம் என்றது உங்களுக்கே விசித்திரமாக இல்லையா? உண்மையில் விசித்திரமானது தான். மக்கள் நடந்து செல்லும்; பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்ற சாலையின் மத்தியில் உள்ள குழிகளில் வாழை மரம் நடுதல்தான் அந்த போராட்டம்.

சாலையின் குழிகளில் வாழை நடுதல போராட்டத்தை அறிவித்தனர் என்றால் அந்த சாலை எந்த இலட்சணத்தில் இருந்திருக்கும்!

எடுத்ததுமே குழிகளில் வாழை நடும் போராட்டத்தில் இறங்கி விடுவார்களா மக்கள். உண்மையாகவே இருக்காது. பல முறை நகராட்சியினருக்கு மனு செய்தும் பயன் இல்லாத காரணம்தான் இந்த அறிவிப்பு.

நாகர்கோவில் கிறிஸ்து நகரிலுள்ள கட்டடத் தொழிலாளர்கள் 91 பேர் மே தினத்தன்று கூடி இந்த விசித்திரப் போராட்டத்தை அறிவித்தனர்.

அவர்கள் கோரிக்கை இது தான்: கிறிஸ்துநகர் சாலையை (வெட்டூர்ணிமடம் சந்திப்பு முதல் கோட்டாறு பார்வதிபுரம் சாலை சந்திப்பு வரை) சாலையின் இருபுறமும் உள்ள சாக்கடைத் தடுப்புச் சுவர்களை விட சாலையை உயர்த்திப் புதுப்பிக்க வேண்டும்; ஜோதித் தெருவிலுள்ள சாக்கடையை அகற்றி, கழிவு நீர் செல்ல ஓடை கட்டி தெருவை செப்பம் செய்ய வேண்டும் என்பதே.

இந்த விசித்திர போராட்ட அறிவிப்பைக்கண்டு அதிர்ச்சி அடைந்த நகராட்சியினர் கோரிக்கையை ஏற்று பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தகவல் :- ... எல். ஏசுதாசன்.



### ஏமாற்றம்

இதுவரை—நான்
வேலைக்காக
விண்ணப்பமனுக்கள்
அனுப்ப செலவழித்த
தொகையை
சிறு சேமிப்பில்
போட்டிருந்தாலாவது
வட்டிக்கிடைத்திருக்கும்
உனக்காக—காதல்
கடிதங்கள் அனுப்ப
செலவழித்ததொகையை
யாருக்கேனும்
இலஞ்சமாக
கொடுத்திருந்தாலாவது
வேலைக் கிடைத்திருக்கும்
எனக்கு கிடைக்காமல்
போனது—
வேலையும் நீயுந்தான்!

ந. க. துறைவன்



### பாரபட்சம்



கனியா...?
அணில் கடித்ததா?
கொடு கொடு
ருசியாய் இருக்கும்
விவாகமா...?
விதவையோடா...?
சீச்சீ...
எச்சில்!

வலங்கை தமிழ்வேந்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நான்தான் தங்கப்பனின் தைராய்டு பேசுகிறேன்!



பாவம்! தங்கப்பன் கொஞ்சம் குள்ளமாக இருப்பான். தலை மட்டும் பெரிசு. விகாரமான தோற்றம் தான். ஆனால் இதற்கெல்லாம் காரணம் நான் என்பது தங்கப்பனுக்கு என்ன பொதுவாக யாருக்கும் தெரிவதில்லை, நான் தான் உடல், உள்ள வளர்ச்சிக்குக் காரணம் என்று.

என்னிடத்தில் ஒரு குறை உண்டு நான் அதிகமாக சில சமயங்களில் வேலை செய்து தொந்தரவு கொடுப்பேன்; அல்லது சரியாக வேலை செய்யாமல் இருந்து வளர்ச்சியைப் பாதிப்பேன். இதற்கும் நான் காரணமில்லை.

தங்கப்பனின் உணவில் இருக்கும் அயோடின் தான் இதற்கெல்லாம் மூல காரணம். அயோடின் சத்து, பழங்கள் காய்கறிகள், பால் முதலியவற்றிலிருந்து கிடைகிறது. இவற்றொடு சீரான உணவும் இருந்தால், நான் ஒழுங்காக வேலை செய்வேன்.

என்னை வேலை வாங்க யாராலும் முடியாது. எனக்கு ஒரு தலைவன் இருக்கிறான். அவனும் என்னைப் போன்ற ஒரு சுரப்பி தான். அவன் பெயர் பிசுடரி. அவனது இருப்பிடம், தங்கப்பனின் தலை. அவன் கட்டளைப்படி தான் நான் இயங்கி வருகிறேன்.

என்னைச் சீராக வைக்கும் வழி வகைகளை நான் தங்கப்பனுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். தங்கப்பன் தான் கேட்பதில்லை.

எனக்கு உயிரூட்டும் உடற்பயிற்சியை நம் முன்னோர்கள் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். அது தான் சர்வாங்காசனம். இதை முந்திய சுட்டிகளில் காணலாம். அந்த உடற்பயிற்சி ஒன்றே என்னை முறுக்கேற்றி இளமையுடன் சிறப்பாக செயலாற்ற வைப்பது.

தங்கப்பனின் கழுத்தின் உள்ளே உள்ள குரல் வளைக்கு பக்கத்தில் நான் இருந்தும், நான் பேசுவது தங்கப்பனுக்கு தெரிவதில்லையே! என் செய்வது?

—சுட்டிபாரதி

(அடுத்து : 'அருளப்பனின் அட்ரேனல்')

FREE E- BOOKS , www.thamizham.net.,

திரையுலகப் பிரமுகர்கள்:

# இயக்குநர் பாலசந்தர் (1)



வருங்காலத்தில் திரைபடத் துறைக்குத் தனியாக ஒரு பல்கலைக்கழகம் அமையுமாயின் அதற்கான பெயர் பட்டியலில் டைரக்டர் கே. பாலசந்தர் பெயரும் நிச்சயம் இடம் பெறும்.

இது அதீதமான மதிப்பீடாகத் தோன்றவில்லை. திரையுலகின் நேற்றைய - இன்றைய - நாளைய வரலாறுகளை உள்ளும் புறமும் அலசிப் பார்க்கிறபோது பாலசந்தரின் கால் நூற்றாண்டு கால படவுலகப் பாதையையும், அதன் பயணத்தையும் அவ்வளவு எளிதில் புறக்கணித்து விட முடியாது.

திரையுலக பாலசந்தரைப் பற்றி தீர்மானம் செய்கிறபோது லத்தீன் அமெரிக்க நாடுகளின் பல புரட்சிகர படைப்புகளோடும் பொதுவுடமை முகாமின் வளர்ச்சி அடைந்த சோஷலிஸத் தன்மைகளோடும் இவரது படங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பது ஒரு வகையில் நியாயமான வாதமே.

ஆனால் தற்காலத் தமிழ் இலக்கியமே இதர நாடுகளின் இலக்கியப் போக்கிலிருந்து ஏறக்குறைய நூற்றாண்டுகள் பின் தங்கியிருக்கிறபோது தாமதமாகத் தமிழகம் வந்து சேர்ந்த திரைப்படத்துறையிலும், பின் தங்கி தானே இருக்கும்?

நூறு ஆண்டுகளுக்கு முன்பு செகாவ் எழுதிய கதைப் பிரச்சனைகளையும் அதற்கும் முன்பு புஷ்கின் படைத்துச்

FREE E- BOOKS , www.thamizham.net.,

''கூடடி''யின்
செப்டம்பர் இதழ் முதல்—
வரலாற்றில் மறைக்கப்பட்ட நெருப்பு வரிகளோடும்
இதுவரை வராத புதிய செய்திகளோடும்
சுப. வீரபாண்டியன் எழுதும்

**"தூக்கு மேடையில் தோழன் பகத்சிங்"**

- புதுடில்லி, தேசிய ஆவணக் காப்பக (National Archives)க் கோப்புகள் காட்டும் ஆதாரங்கள்
- 50 ஆண்டுகளுக்கு முந்தைய, ஆங்கில, தமிழ்ச் செய்தித்தாள்கள் தரும் தகவல்கள்
- நேர்முகப் பேட்டிகள் மூலம் சேர்த்த செய்திகள்

சென்ற அற்புதங்களையும், 70 ஆண்டுகளுக்கு முன்பு கார்க்கி படைத்துக் காட்டிய புதுமை அம்சங்களையும் தமிழ்நாட்டில் இப்போது தானே அரைகுறையாகக் காண முடிகிறது?

சமீபத்திய விண்வெளி விஞ்ஞானத்திலேயே இந்தியாவிற்கும் இதர நாடுகளுக்கும் 20 ஆண்டுகள் இடைவெளி இருக்கிறபோது திரையுலக இடைவெளி ஆச்சரியமானதல்ல! அந்த வகையில் பாலசந்தரைப் பற்றி நமக்குரிய சித்தாந்தக் கண்ணோடு தர்க்கரீதியாக அணுகி-னாலும் அவரது காலச் சமூக, சூழல் பின்னணியுடன் அவரது படைப்புகளை அலசிப் பார்ப்பதே பொருத்தமுடையதாகும். தனக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு வசதிகளை முழுமையான முறையிலும் சரியான வகையிலும் ஆக்கப் பூர்வமான தன்மையில் திரையை இவர் பயன்படுத்தி இருக்கிறாரா?

தன் கண்ணெதிரே நிகழ்ந்த தவிர்க்க முடியாத சமுதாயப் போக்குகள் இவரது படைப்புகள் தன் வயப்படுத்திக் கொண்டதா? இப்போதைக் காட்டிலும் மேலும் வலிமையாக, இத் திரைபடச் சாதனத்தை இவர் பயன்படுத்தியிருக்கலாமா? இன்றைய இந்தியத் திரைப்படத்தின் கடைசி எல்லைக் கோடாக இவர் விளங்குகிறாரா? அல்லது ஆரம்பப் படியிலேயே தான் நிற்கிறாரா? என்பதையெல்லாம் பரிசீலிக்க வேண்டியது ஒரு விமர்சகனின் கடமை. சாதித்தவைகளைத் தொட்டுக் காட்டி சாதிக்க வேண்டியவை

FREE E- BOOKS , www.thamizham.net.,

"பெண் கவிஞரின் பெருமைமிகு நூல்கள்"

"மொழியும் அதன் வாழ்வும்" — நிர்மலா சுரேஷ் — ரூ 16-00
(மொழி ஆராய்ச்சி நூல்)
"மண்ணில் பதியும் பாதங்கள்" — .. — ரூ 7-50

கிடைக்குமிடம் : 'பிரயத்னா'
27E, தெற்கு அவின்யூ, காமராஜ் நகர், திருவான்மியூர், சென்னை-600 041.

களை சுட்டிக் காட்டுவதற்கு இத்தனையே பரிசீலனைகள் அடிப்படையானவை.

படவுலகில் பாலசந்தர் ஒரு நிறுவனம். புதிய போக்குகளின் மைல்கல். திரை மலையில் பல உச்சிகளைத் தொட்டவர். சில நேரங்களில் சிகரங்களைத் தொட்டுவிட்டு சரிந்து போனதும் உண்டு, சேர்ந்து போகாமல் மீண்டும் அடுத்த சிகரத்திற்கு பயணமாவதும் உண்டு. ஒரு சில சமயங்களில் தன்னையும் தாண்டிச் சென்ற திரைமலை ஏறிகளின் திடீர் விஸ்வரூபங்களைக் கண்டு திகைத்து நின்றதும் உண்டு. ஆனால் துவண்டு போனதில்லை. மலிந்து போன மசாலாத் தனங்களுக்கு புதிய மவுசும் மகத்துவமும் ஏற்பட்டு பேயாட்டம் ஆடுகிற போதெல்லாம் மலைத்துப் போனதுண்டே தவிர மாயமாய் மறைந்து போனதில்லை. இதுதான் இவரது பலம். இவரைப் பொறுத்தவரை படத்துறை என்பது ஒரு பரிசோதனைச் சாலை. அதன் விஞ்ஞானியாகவே இவர் திகழ்ந்து கொண்டிருக்கிறார். இந்த விஞ்ஞானியால் புதியதாக ஏதாவது கண்டு பிடிக்கப்பட்டதா? அது சமுதாயத்திற்கு - குறிப்பாக ஏழை எளிய மானிடர்க்கு பயன்படுகிறதா? என்பதெல்லாம் ஆய்வுக்குரிய ஒன்றாக இருக்கலாம். ஆனால் 'தேடல்' முயற்சியை இன்று வரை கைவிடாதவர் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

ஏ பி. நாகராஜன் போன்றோரின் புராணப் படங்கள்- எஸ். பாலசந்தர் போன்றோரின் துப்பறியும் படங்கள்- மாடர்ன் தியேட்டர்ஸின் சண்டைப் படங்கள் - தேவர் பிலிம்சின் மிருகப் படங்கள் - விட்டலாச்சாரியா போன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

**ரூபாயின் தாழ்நிலை :**

தற்போது ஒரு ரூபாயின் சராசரி மதிப்பு சுமார் 17.83 காசுகள் தானாம். இதே ஒரு ரூபாய் 1971இல் 51.78 பைசா மதிப்பாக இருந்தது. தற்போது கீழ்க்கண்ட பெரும் நகரங்களில் இதன் மதிப்பு வருமாறு :-

| | | | |
|---|---|---|---|
| பம்பாய் | — | 17.57 | காசு |
| கல்கத்தா | — | 19.05 | ,, |
| டில்லி | — | 17.83 | ,, |
| சென்னை | — | 17.79 | ,, |

—எம். பி. இளங்கோ

றோரின் மாயஜால ஆபாசப் படங்கள் பீம்சிங் போன்றோரின் கூட்டுக் குடும்பப் பிரச்சினைகள் பற்றிய படங்கள் - ஆகியவைகளிலிருந்து வித்தியாசமாகத் தனித்து விலகி தற்காலப் பிரச்சினைகளுக்குத் திரையைக் கொண்டு வந்து தரமுடன் நிறுத்திய ஸ்ரீதர், கே எஸ். கோபால கிருஷ்ணன் ஆகியோரைத் தொடர்ந்து படவுலகில் பிரவேசித்தவர் பாலசந்தர் ஒரு கரத்தால் இவர்களது கரங்களைப் பிடித்த அதே நேரத்தில் மறுமுனையில் இவரது இன்னொரு கரம் பிடித்து புதிய தலைமுறை பரிணமித்து வருகிறது. பாரதிராஜா ருத்ரைய்யா. பாலு மகேந்திரா, மகேந்திரன். ஸ்ரீதர் ராஜன் .. என்று இந்த பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இவர்களது படங்களில் சில மகத்தான சாதனைகளைப் புரிந்திருககலாம். அல்லது இல்லாமல் போயிருக்கலாம். ஆனால் ஒரு தன்மையை மட்டும் நம்மால் நிராகரிக்க முடியாது. எடுத்துக் கொண்ட பிரச்சினையை சீரியசாகவும், சீராகவும், புதிய உத்திகளோடும், பொறுப்புணர்ச்சியோடும் - அனைத்திற்கும் மேலாக ஒரு வேள்வி போலவும் தமது படைப்பு களில் இவர்கள் லயித்துப் போகிறார்கள். திரைத் தொழிலை ஒரு வேள்வியாகவும் ஆராய்ச்சி கூடமாகவும், ஆராதனைப் பீடமாகவும், ஆதர்ஸிக்கத்துவங்கியவர் பாலசந்தர். அதன் மீது புதிய மரியாதையை மக்களுக்கு உருவாக்கப்பாடுபட்ட ஒரு சிலரில் இவருக்குப் பிரதான இடம் உண்டு. (தொடரும்) —டி. எஸ். ரவீந்திரதாஸ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஒரு தோழரின் எதிரொலி:

## இந்தியா - நேற்று - இன்று - நாளை

சுட்டியில் வெளிவந்த தொடர்கட்டுரை பற்றிய ஒரு விமர்சனம்

இந்தக் கட்டுரை ஆக்கப்பூர்வமான வழி சொல்ல முயல்கிறது என்ற குறிப்போடு ஆரம்பமாகியது. ஆனால் எதிர்பார்த்த அளவு விளக்கமானதாக இல்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது. சிந்திக்க ஆரம்பித்தவர்களுக்கும், சிந்தனையை நெருங்கியவர்களுக்கும், அடுத்த நமது தொடக்கம் எப்படி என்று குழம்பி நிற்பவர்களுக்கும் இந்தக் கட்டுரை ஆக்கபூர்வமான வழிகாட்டியிருப்பது உண்மைதான். ஆனால் சினிமாக்களும், கழிசடை பத்திரிகைகளும் மந்தப் படுத்தியிருக்கும் இளம் உள்ளங்களை மீட்க இன்னும் ஆழமாக, விளக்கமாக இருக்க வேண்டியது அவசியம் என்றே தோன்றுகிறது.

இந்தக் கட்டுரையின் ஒரு முக்கியமான அம்சம் "தத்துவத்தின் வறட்சி"யாகும். மார்க்சியம் தவறாக அர்த்தம் காட்டப்படுகிறது என்பதை மறுக்கத்தான் இங்கே ஆட்கள் இருக்கிறார்கள். மார்க்சியம் பேசுபவர்களே அதன் சிறப்பான அர்த்தக் கூறுகளை அசிங்கப்படுத்துகின்றனர். மார்க்சியம் என்றாலே ஆயுதப் புரட்சியென்ற பயத்தை-மிரட்சியை மக்களிடம் ஒரு தப்பான அபிப்பிராயத்தை மக்களின் மனதில் பதிய வைத்து மார்க்சியத்தை அந்நியப்படுத்திய பெருமை மார்க்சியக் கட்சிகளையே சேரும். இதை உணரும் ஒவ்வொருவருக்கும் மார்க்சிய தத்துவத்தை விரிவுபடுத்துவதும், சீராக்குவதும் உலகத்தேவை மட்டுமல்ல உடனடித் தேவை என்பதும் புரியும்

இன்றைய நிலையில் நாளைய நமது நடை முறைகளை கோடிட்டுக் காட்டுவது கட்டுரையின் கடைசி அத்தியாயம். இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை, சமுதாய ஸ்தம்பிப்பை, முரண்பாடுகளை எல்லாம் பட்டியல் போட்டுத் தந்திருக்கிறது கட்டுரையின் கடைசி அத்தியாயம். யார் தொடங்குவது என்று குழம்பி எல்லோரும் தொடங்குவோம் என்று கிளம்பும்போது எங்கே தொடங்குவது என்று கேள்விக்குறி எழுத்தான் செய்கிறது. அதற்கு சார்பாக நடைமுறை சாத்தியங்களை கட்டுரை கூறுபடுத்திக் கூறுகிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இவ்விதழ் முதல் சுட்டி ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு. சுட்டி கு. நாராயணபாரதி அவர்கள் சுட்டியின் ஆசிரியர் பொறுப்பை ஏற்கிறார். சுட்டியின் ஆசிரியர் குழுவே அனைத்துப் பொறுப்புகளுக்கும் கூட்டுத் தலைமை ஏற்றாலும், சில நடைமுறை தேவைகளுக்கே ஆசிரியர் என்று குறிப்பிடுகிறோம். இதுவரை இப்பொறுப்பேற்றிருந்த திருமதி. நிர்மலா சுந்தர் (நிலா) அவர்கள் தொடர்ந்து ஆசிரியர் குழுவில் வழக்கம் போலவே பணியாற்றுவார்.

—ஆசிரியர் குழு

நமது போராட்டத்தின் முதல் கட்டம் மக்களிடையே என்று தொடர்ந்து கூறும் கட்டுரையின் அம்சங்கள் வழி காட்டியாய் அமைகின்றன. நடைமுறை சாத்தியங்களுக்கு அப்பாற்பட்ட வழிமுறைகளை அலங்கார வார்த்தைகளோடு சொல்லி சிறப்பான கட்டுரை என்ற பெயருக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளாமல் இருப்பதில் இக்கட்டுரை சிந்தனைக்குரியது.

கட்டுரையின் கடைசி "பாரா" எல்லோருக்கும் விடப்படும் கோரிக்கை, அழைப்பு. இதுபோல் ஆக்கப்பூர்வமான நடைமுறை சாத்தியங்களைக் கூறும் கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் பத்திரிகைகள் சமுதாய மாற்றத்தில், நாளைய வரலாற்றில் ஒரு தனிமனிதனின் பங்கைவிட-ஒரு இயக்கத்தின் பங்கைவிட முக்கியமான பங்கை வகிக்கிறது என்பதை நினைவில் கொண்டு இன்னும் பல பத்திரிகைகள் தங்களின் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும்.

சுட்டி போன்ற பத்திரிகைகள் தம்பணி முடிந்ததாக திருப்திப்பட்டுக் கொள்ளக்கூடாது. இந்தக் கட்டுரையின் மூலம் எங்களைப் போன்றவர்களுக்கு அரிச்சுவடி ஆரம்பித்திருக்கிறீர்கள். சிந்திக்கத் தூண்டுவதோடு மட்டுமில்லாமல் சமுதாய மறுமலர்ச்சிக்குத் துணை வரவேண்டியது உங்கள் கடமை. போராட்டங்களின் ஆயுதங்களாய் பத்திரிகைகள் தான் செயல்பட முடியும்-செயல்பட வேண்டும்.

—எஸ். சுப்பிரமணியன்

8/4C, பிரையண்ட் நகர் 3வது தெரு தூத்துக்குடி

(மாறுபட்ட கருத்துக்கள் உள்ளவர்களிடமிருந்து எதிர் பார்த்த அளவு விமர்சனங்கள் இதுவரை வரவில்லை.)

FREE E- BOOKS , www.thamizham.net.,

# குளிர்பானங்கள்!

கோடை தாகம் தணிக்க சுத்தமானது என்று கருதப்படும் பிரபல பாட்டில் குளிர்ப்பானங்களை அருந்தலாமென்றால், கிட்டத்தட்ட ஒரு சாப்பாட்டு விலை ஆகிறது. குறைந்த விலை ரூ. 1-75! ஏன் இந்தக் கொடுமை என்று ஆய பிரபல குளிர்ப்பான நிறுவனங்களை விசாரித்த போது...

சுகாதாரமான பாட்டில் பானங்களைச் செய்ய தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரம் மட்டும் ரூ. 10 லட்சம் ஆகிறதாம். தினம் இயந்திரத்தில் 10 பாட்டில்களுக்கு ஒரு பாட்டில்வீதம் சேதமாகிறதாம். பாட்டில் முனையில் சிறிது சேதமானாலும் போச்சு! பருவகாலத் தொழில் என்பதால், சிலமாத வியாபாரத்தை, பல மாதங்கள் விலையில் சரிக்கட்டவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இத்தொழிலில் உள்ள கடும்போட்டி காரணமாக கோடிக்கணக்கில் நிறுவனங்கள் விளம்பரம் செய்கின்றன. இச்செலவும் சேர்த்து நுகர்வோர் தலையில் சுமத்தப்படுகிறது. இது போதாதென்று அரசு ஒரு பாட்டிலுக்கு 25-பைசா வரி பிடுங்குகிறது. ஆக ஒரு பாட்டிலின் விலை ரூ. 1-35 ஆகிறது. இதில் நிறுவனத்திற்கு லாபம் 8 காசுதான்.



அரசு வரியைக் குறைத்தால் விலை குறையுமா? சில கடைக்காரர்கள் அத்து மீறிய லாப வெறியோடு (ரூ. 3வரை) விற்பதற்குத் தடை வந்தாலே இது சாத்தியம். நட்சத்திர ஒட்டல்களில் ரூ. 7-வரை தீட்டுகிறார்கள்.

விலை குறைவான கலர், கோலி சோடா போன்றவைகள் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படும் சாயத் தண்ணீர்தான். சாலை தள்ளுவண்டிக்காரர்கள் சிலர் அசுத்தமான தண்ணீரில் சாக்கரின், பிசின், நாலாந்தர கலர்ப்பொடி இவற்றைப்போட்டு அழுக்

FREE E- BOOKS , www.thamizham.net.,

குக்கைகளால் கலக்கி, பலவண்ண கலவை பானத்திற்கு 'எசன்ஸ்' தயார் செய்து விற்கிறார்கள். நல்ல 'எசன்ஸ்' தயாரிக்க பாட்டில் ரூ. 6-வரை ஆகும்போது இவர்களோ 25 காசில் முடித்து விடுகிறார்கள். இதை அருந்துபவர்களில் 98% பேர்களுக்குத் தொற்று நோய்கள் வருகின்றன என்கிறது ஒரு புள்ளி விபரம். மோசமான சாயத்தாலும், எசன்சாலும் வயிற்றுப் புண்களும் சரும நோய்களும் ஏற்படுகின்றன.

சுத்தமான தண்ணீரை வெறும் பாட்டில்களில் சுகாதாரமாக அடைத்து 25 காசுக்கு யாராவது தரமுடிந்தால் பெரிய தொண்டாக இருக்கும்.

—சி. இராமன்

சிறு கதை

# கானல் நீருக்காக ஓடும் கலைமான்கள்

வேலை வாய்ப்பு அலுவலகம்!

வாசலெல்லாம் பாரதத்தின் பரிதாபத்துக்குரிய ஜீவன்கள்!

"யோவ்! பேசாம லைன்ல நில்லுய்யா..."—ஒரு எஸ். எஸ். எல். சி. ஓங்கி அதட்ட, எம்.ஏ., எம்.எஸ்.ஸி-களெல்லாம் ஊமையானது.

"லைன்ல நில்லுனா, நின்னு தொலைங்கப்பா..."

என்னவோ, அவர்களே வேலை போட்டு தருவதுபோல் செய்கிற அதிகாரமும் ஆர்ப்பாட்டமும்...

என்முன்னே க்யூ கரைந்தாலும். பின்னால் நீண்டு கொண்டேயிருந்தது.

என்முறை வந்தது

அலுவலர் அதட்டலாய், "என்னய்யாவேணும்...?

"சார்! நீங்களெல்லாம் அரசாங்கத்தின் ஊழியர்கள்! எவருக்கும் எஜமானர்கள் அல்ல! .."

அலுவலர் கிண்டலாய், "என்ன சார் வேணும்...?

"4 வருஷத்துக்கு முந்தி 'எஸ்.எஸ்.எல்.சி.' பதிஞ்சேன்! இப்ப பி.ஏ. "கம்ளீட்" பண்ணியிருக்கேன், பதியணும் .."

—அன்றைய தேதியில் பதிந்து, பதிவட்டையை நீட்டினார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

"என்ன சார்! இன்னைய தேதி போட்டிருக்கீங்க!..."

"ஏன்? .."

"என்னோட நாலுவருஷ சீனியாரிட்டி பாதிக்குமே..."

"வாட் டு யூ ஸே...?"

"76ல எஸ்.எஸ் எல்.சி முடிச்சதும் பதிஞ்சேன், சார்! அடுத்து 77ல பி.யு.சி, பதிய வந்தப்போ. கூடுதல் தகுதியை மட்டும் குறிச்சுக்காம "24—6—77"ன்ற தேதியில் புது கார்டு தந்தீங்க .. மறுபடியும் இப்ப பி.ஏ. பதிய வந்தா... பழைய சீனியாரட்டியை பத்தி கவலைப்படாம. இன்னைய தேதியை போடுறீங்களே .. இந்த மாதிரி சீனியாரட்டியை குறைச்சுட்டு வந்தா, எவனுக்கும் இந்த ஜன்மத்துல வேலை கெடைக்காதே சார்!?... "

"அதிகபடியா பேசறே.. ! வெளியே போ...!"

"வேலைதர வக்கில்லைன்னா ..கூட்டத்தைக் குறைக்க.. இஷ்டத்துகு சட்டத்தை வகுத்துக்குவீங்களா...?"

"ஐ ஸே, யு. கெட் அவுட்..."

பதிவட்டையை பொடி, பொடியாக நொறுக்கி விசிறி விட்டு, வெளியேறினேன். —அண்ணா அன்பழகன்

# தபால் தந்தித் துறையில் கொத்தடிமைகள்

இரயில்வே நிர்வாகம் தற்போது தினக்கூலியாட்களாக (Casual Labourers) வேலைசெய்துவரும் 70,000 பேரை தற்காலிக ஊழியர்களாக நியமிக்க முடிவெடுத்திருக்கிறது. இதன்படி 360 நாட்கள் தொடர்ந்து வேலை செய்யும் தினக் கூலியாட்கள் அனைவரும் தற்காலிக ஊழியர்களாக்கப்படுவார்கள். அதன் மூலம் இவர்கள் மற்ற நிரந்தர ஊழியர்களைப்போல் மாதச் சம்பளம், விடுமுறை, மருத்துவ வசதிகளும் மற்றும் பயணச் சலுகைகளும் பெறுபவர்களாகின்றனர். இதை ஒவ்வொரு கட்டமாக 1987-ம் ஆண்டிற்குள் முழுவதுமாக செயல்படுத்த முடிவெடுத்துள்ளனர்.

(இண்டியன் எக்ஸ்பிரஸ், மே 29)

இதைக் கேள்விப்படும் அதே நேரம் தபால் தந்தித்துறையில் இந்த சலுகைகள் எதுவுமில்லாமல் பல்லாயிரககணக்கானவர்கள் கூடுதல் இலாகா (Extra Departmental) ஊழியர்கள் என்ற பெயரில் கொத்தடிமைகள்போல் வேலை செய்து வருவதைக் காணும்போது மனம் வேதனையுறுகிறது. இந்தக் கூடுதல் இலாகா ஊழியர்கள் பார்சல் கட்டு

FREE E- BOOKS , www.thamizham.net.,

வெளிவந்துவிட்டது!
திருவிக்கரம்பை சண்முகத்தின்
கவிதை அரங்கேறும் நேரம்'
(புதுக்கவிதைத் தொகுப்பு)
விலை ரூபாய்: 6-00
M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
பாண்டியன் பதிப்பகம்,
17, மூன்றாவது தெருக்குத் தெரு கிழக்கு,
செனாய் நகர் - சென்னை - 600 030

பவர், தபால்காரர், சரக்கு கொண்டு செல்பவர் மற்றும் பிரிவு அஞ்சல் அதிகாரி (Branch Post Master) என நான்கு பிரிவுகளில் உள்ளனர்.

தற்போது இவர்கள் பகுதிநேரப் பணியாளர்களாக கருதப்பட்டு ரூ. 150 முதல் ரூ. 200 வரை சம்பளம் பெறுகின்றனர். சட்டப்படி இவர்கள் நாள் ஒன்றுக்கு 4-மணி நேரமே வேலை செய்ய வேண்டுமென்றாலும் இவர்களில் பெரும்பாலோர் 10-மணி நேரம்வரை உழைக்கின்றனர். நிறையப் பேர் கடந்த 10-வருடங்களாக என்றைக்காவது ஒருநாள் நிரந்தரமாக்கப்படுவோம் என்ற நம்பிக்கையில் இதே சம்பளத்தில் வேலை செய்து வருகின்றனர். இந்த ஊழியர்களே தபால்தந்தி துறையின் உயிர் நாடியாக இருந்தபோதிலும் இவர்கள் இதுநாள்வரை நிர்வாகத்தினரால் கண்டுகொள்ளப்படாமல் இருந்து வருகின்றனர்.

தனியார் நிறுவனத்தில் 210 நாட்கள் தொடர்ந்து வேலை செய்யும் ஒருவரை அந்நிறுவனம் பணியில் நிரந்தரமாக்கா விட்டால் அரசாங்கம் உடனே வழக்கு தொடருகிறது. ஆனால் மத்திய அரசாங்கத்தின் முக்கியத் துறையான தபால் தந்தித் துறையிலேயே வேலை செய்துவரும் இந்த ஊழியர்கள் மிகவும் மோசமான முறையில் வாழ்க்கையை நடத்தவேண்டிய நிலையில் உள்ளது மிகவும் கொடுமையாகும். உடனே தபால் தந்தித்துறை நிர்வாகம் இந்த கூடுதல் இலாகா ஊழியர்கள் விஷயத்தில் நடவடிக்கை எடுத்து குறைந்தது ரெயில்வே ஊழியர்களுக்கு கிடைத்தது போன்ற வசதிகளையாவது இவர்களுக்குச் செய்யவேண்டியது உடனடித் தேவையாகும்.

— எப். வில்லியம் ஆன்ட்ரூஸ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# பிந்தரன்வாலேயுடன்... பேட்டி

பயங்கரவாதம் வெற்றியளிக்காது என்பதை வரலாறு மீண்டும் பஞ்சாபில் வலியுறுத்தியுள்ளது. கொல்லப்பட்டதற்கு சில மாதங்களுக்கு முன் ஈ.வ்ஸ் வீக்லி நிருபருக்கு பிந்தரன்வாலே அளித்த பேட்டியிலிருந்து சில இடங்கள்:-

"இந்துக்களை வேறோடு அழிப்பதாக பயமுறுத்தினீர்கள் உண்மையா?"

"ஆம்! அது பதிலடிதான். நான் முதலில் செயல்படவில்லை. ராஜஸ்தான் ஜெய்சங் 5—12—83இல் சீக்கியர்களுக்கு எதிராக விடுத்த மிரட்டலுக்கு இது எதிர் அறிக்கையே!"

"உங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு இந்திரா காந்திக்கு வற்புறுத்தல் அதிகரித்து வருகிறதே. தீவிரவாதிகளிடம் கொஞ்சம் மென்மையாக நடந்து கொள்வதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றனவே."

"கடந்த 36 ஆண்டுகளாகவே எங்கள் மீது கடும் நடவடிக்கைதான் எடுக்கப்பட்டு வந்திருக்கிறது. எங்கள் முதுகுக்குப் பின்னால் இப்படிப் பேசும் கோழைகளை நிறுத்துங்கள். சரியான பாடம் புகட்டுகிறோம்."



"சீக்கியர்கள் இந்தியாவின் ஒரு பகுதியாகத் தொடர்வார்களா?"

"ஆம்! ஆனால் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படும் இன்றைய நிலையில் இது சாத்தியமில்லை

இந்து என்ற சொல்லே இல்லை. இவ்வார்த்தை ஒரு சமீபத்திய கண்டுபிடிப்பு. மனித இனம் முழுவதும் அடிப்படையில் சீக்கியமயமானதுதான். சீக்கியர்கள் படைப்பை இடைஞ்சல் செய்வதில்லை; அதோடு இணைக்கிறார்கள். தலை முடியும், தாடியும் படைத்தவனின் நன் கொடைகள். அதனை நாம் பேண வேண்டும். இயற்கையாக ஒரு மனிதன் வாழவேண்டுமாயின் அவன் சீக்கியனாக வேண்டும் .."

FREE E- BOOKS , www.thamizham.net.,

திருத்தி அமைக்கப்பட்ட புதிய ஐந்தாம் பதிப்பு வெளிவந்துவிட்டது

ஞானோதய வைத்தியர் எழுதிய

எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்

என்ற அரிய நூலை-பதிவு தபாலில் பெற 14-00 ரூபாயை கீழ்கண்ட முகவரிக்கு M.O. செய்க.

**நர்மதா பதிப்பகம்**
10, சோமசுந்தரம் தெரு, தி.நகர், சென்னை-17.

இவரைத் தொடர்ந்து இவ்வியக்க மாணவச் சங்க பொதுச் செயலாளர் ஹர்மீந்தர்சிங் பதிலளிக்கிறார்.

"உங்கள் வழி வன்முறை. பொற்கோவில் வளாகத்தில் இன்ஸ்பெக்டர் அட்வாலை நீங்கள் தானே கொன்றீர்கள்?"

"ஆம் நாங்கள் தான் அட்வாலைக் கொன்றோம். எங்களவர்களை சித்ரவதை செய்வதற்கும், கொல்வதற்கும் அவர் காரணமானவர். இந்த ஈவு இரக்கமற்ற இன்ஸ்பெக்டர்கள் எங்கள் பெண்களை மானபங்கப்படுத்தினார்கள். இத்தயவர்கள் களையப்பட வேண்டியவர்கள்."

"பொற்கோவிலின் மீது ஆக்ரமிப்பு நடத்தும்படி இந்திரா காந்தி அதிகமாக வற்புறுத்தப்படுகிறாரே. அவர் அவ்விதம் செய்தால் என்ன நடக்குமென்று நினைக்கிறீர்கள்?"

"அத்தகைய ஆக்ரமிப்பிற்கு ஆணையிடும் அந்தநாளை நினைத்து திருமதி இந்திரா காந்தி வருந்த வேண்டியிருக்கும். அந்த நாளில் சீக்கியர்களுக்கு காலிஸ்தான் நனவாகும். இதற்கு திருமதி காந்தியே காரணமாக இருப்பார்."

FREE E- BOOKS , www.thamizham.net.,

# எம்.ஜி.ஆரின் வானத்துக் காவல் படை

நமது முதல்வர் திரு. எம். ஜீ. ஆர் அவர்கள் கடந்த மே தின விழாவின் போது தமிழ்நாட்டுக் காவல் துறையில் ஆகாயப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தப் போவதாகவும் இதற்காக 4 விமானங்கள் வாங்குவது பற்றி மத்திய அரசை ஏற்கனவே அணுகியுள்ளதாகவும் நிருபர்களிடம் தெரிவித்து இருக்கிறார்.

தமிழகக் காவல் துறைக்காக மட்டும் ஆண்டுக்கு ரூ 60 கோடி செலவிடப்படுகிறது. இதில் 65% சம்பளம், 15% பயணச் செலவுகள், 10% வாகன வசதிகள், 5% சீருடைகள் மீதித்தொகை பயிற்சி, ஆய்வு, பரிசுகள், ஊக்கத்தொகை என்று பிரிக்கப்படுகிறது. இந்த பட்ஜெட்டின்படி காவல் துறையில் ஆகாயபபடை ஏற்படுத்துவது ஒரு நல்ல கனவாகவே அமைகிறது. ஏனெனில் புதிதாக அல்லாமல் விமானப் படையினர் உபயோகித்து ஒதுககிய பழைய ஹெலிகாப்டர்களில் ஒன்றை வாங்கவே 2.5 முதல் 10 லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. அப்படியே வாங்கினாலும் போலீஸ் படை அமைப்பதற்கு விமானச் செலவு மட்டும் ஒரு கோடிககு குறையாது. இப்படி 4 ஹெலிகாப்டர்கள் மட்டும் வாங்கிப் பராமரிக்க 10 விமானிகள், 25 பணியாட்கள் தேவை. இந்த விமானங்கள் சரியாகப் பணிபுரிய நாள் ஒன்றுககு 4 மணி நேரம் பறக்கவிடப்பட வேண்டும். இப்படிப் பறக்க விட பழைய விலைவாசிக் கணக்குப்படியே ஒரு மணிக்கு ரூ 15,000 வீதம் ஒரு நாளைக்கு ரூ 2.4 லட்சம் ஆகும். இதனால் வருடத்திற்கு ரூ 7.44 கோடி செலவாகும்.



"ப்ளு தண்டர் (Blue Thunder) என்ற ஹாலிவுட் திரைப்படத்தில் ஹெலிகாப்டர் போலீஸ் படையொன்று கொள்ளைக் கும்பலை வான்வழியாகத் துரத்திச் செல்வதைப் பார்த்தபிறகு நம் முதல்வருக்குத் தமிழகக் காவல் துறையிலும் இப்படியொரு புது ஸ்டன்ட் செய்யும் எண்ணம் உதித்திருக்கிறது. இன்னொரு மேல்நாட்டுத் திரைப்படத்தில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

"ரங்கா டைப் பௌண்ட்ரி"

- போஸ்டர் அச்செழுத்துக்கள்.
- எல்லா வித, எல்லா மொழி ஈய எழுத்துக்கள்.
- அச்சக உபகரணங்கள்.
- புது அச்சகம் தொடங்க நாணயமான வழிகாட்டுபவர்கள்.

**அலுவலகம்:** 78, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112.
**தொழிலகம்:** 88, குட்டி செட்டி தெரு, பெருமாள்பேட்டை. சென்னை-7.
**தொலை பேசி:** 37999, 664293

குதிரைப் போலீஸ் படையைப் பார்த்தால் தமிழ் நாட்டுப் போலீசாரையும், இந்தக் கோமாளி முதல்வர் குதிரையேற்று வார் போலும்!" என்று ஆன்லுக்கர் பத்திரிகை விமர்சித்து உள்ளது.

நடிக்கும் போது ஏராளமாக செலவு செய்து பிரம்மாண்டமான செட்டுகள் போட்டு ஸ்டண்ட் செய்தது போல அவர் முதல்வரான பின்னும் செய்ய நினைத்தால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளட்டும். அது பண முதலைகள் வியாபார நோக்குடன் முதலீடு செய்யும் பணத்தில் தயாராவது. ஆனால் இதுவோ மக்களது வரிப்பணத்தில் தயாராவது. அதுசரி, இவரது ஆட்சியில் ஆகாயப் படை அமைத்து குற்றவாளிகளைப் பிடிக்குமளவுக்கு குற்றங்கள் பெருகி விட்டதாக இவரே கருதுகிறாரோ? —நிலா

## எமக்கு உகந்தவை

**கொத்தடிமைகள்:** (சிறுகதைத் தொகுப்பு)
ஆசிரியர்: நா. பார்த்தசாரதி விலை: ரூ. 7.00

**யுகதர்மம்:-** (சிறுகதைத் தொகுப்பு)
ஆசிரியர்: இந்திரா பார்த்தசாரதி விலை ரூ. 12.50

**அக்னி:-** (இரு குறுநாவல்கள்)
ஆசிரியர்: இந்திரா பார்த்தசாரதி விலை: ரூ. 8.50

★ மேற்கண்ட 3 நூல்களும் கிடைக்குமிடம்: தமிழ்ப் புத்தகாலயம், 58, டி.பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005.

**வெற்றிக்கு வழி தன்னம்பிக்கையே:-** (மனோதத்துவ நூல்)
ஆசிரியர்: மனோதத்துவப் பேரறிஞர் ஞானமூர்த்தி. வெளியீடு: அநுராகம், 10, ஹென்ஸ்மென் ரோடு, தியாகராய நகர், சென்னை-600017. விலை: ரூ. 6.00.

**அக்னி அரும்புகள்:-** (கவிதை நூல்)
ஆசிரியர்: பருத்தியூர் பாலு வெளியீடு: கலைஞன் பதிப்பகம், 10, ஹென்ஸ்மென் ரோடு, சென்னை.600017. விலை: ரூ. 5.00

**எழுபது கோடியில் இவனும் ஒருவன்:-** (கவிதை நூல்)
ஆசிரியர்: கௌதமன். வெளியீடு: கலைஞன் பதிப்பகம், 10, ஹென்ஸ் மென் ரோடு, தி.நகர், சென்னை.600017. விலை: ரூ. 6.00

**வெளிச்சம் வெளியே இல்லை:-** (கதைக் கவிதைகள்)
ஆசிரியர்; மு. மேத்தா. வெளியீடு: நர்மதா பதிப்பகம், பத்து, சோம சுந்தரம் தெரு, தி.நகர், சென்னை.600017. விலை: ரூ. 6.00

**நடந்த நாடகங்கள்:-** (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: மு. மேத்தா. வெளியீடு: நர்மதா பதிப்பகம், பத்து, சோம சுந்தரம் தெரு, தி.நகர், சென்னை.600017. விலை: ரூ. 6.00

**தமிழ்ப்பகைவன் கீரன் தமிழ் மேடையில் பேசுவதா?**
(கீரனுக்கும் கழகத்துக்கும் நடந்த மடல் தொகுப்பு)
தனித்தமிழ் இலக்கிய மாநாட்டு வெளியீடு.4.
கிடைக்குமிடம்:. தனித்தமிழ்க் கழகம், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி.605009. விலை: 50 காசு

**இருமல் ஜலதோஷ நிவாரண மருந்துகள்:-** (மருத்துவ நூல்)
ஆசிரியர்: கே எஸ். லட்சுமணன், கிடைக்குமிடம்: தமிழ்நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, தி. நகர், சென்னை.600017. விலை: ரூ. 3.00

**வெள்ளைப் பூண்டு வைத்தியம் :-** (மருத்துவ நூல்)
ஆசிரியர்: கே. எஸ். லட்சுமணன் கிடைக்குமிடத: தமிழ்நாடு பதிப்பதிம், 36/6, சரோஜினி தெரு, தி. நகர், சென்னை.17. விலை: ரூ. 3.00

**வெங்காய வைத்தியம்:-** (மருத்துவ நூல்)
ஆசிரியர்: கே.எஸ். லட்சுமணன். கிடைக்குமிடம்: தமிழ்நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, தி.நகர், சென்னை.600017. விலை: ரூ. 3.00

**சர்மரோக நிவாரண மருந்துகள்:-** (மருத்துவ நூல்)
ஆசிரியர்: கே.எஸ். லட்சுமணன், கிடைக்குமிடம்: தமிழ்நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, தி நகர், சென்னை.600017. விலை: ரூ. 3.00

**வைட்டமின் காய்கறிகள்:-** (மருத்துவ நூல்)
ஆசிரியர்: கே.எஸ். லட்சுமணன், கிடைக்குமிடம்: தமிழ்நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, தி.நகர், சென்னை.600017. விலை: ரூ. 3.00

'கைவிளக்கு' ஆசிரியரும் [illegible] விவரம் தெரிந்த நாள்முதலே [illegible] வெளியிட்டு வருபவருமான [illegible] இருதய நோய் குணமாக [illegible] இயன்ற தொகையினை அனுப்பி உதவும்படி [illegible] கொள்கிறோம். முகவரி: [illegible] 416A புஷ்பா, R. V. நகர், நாகர்கோவில்-629001.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சிகரெட் ஏன் ஒழியவில்லை?

இந்த நூற்றாண்டில் போர்களினால் இறந்தவர்களை விட புகைபிடித்து இறந்தவர்களின் தொகைதான் அதிகம்.

அப்படியிருந்தும் ஏன் புகையை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை? சிகரெட் விற்பனை உலகின் பிரமாண்டமான லாபகரமான வியாபாரமாக இருப்பதே இதற்குக் காரணம். சிகரெட்டின் தீமையைப்பற்றி விளம்பரங்கள் செய்யப்பட்டு, அதன் கொடுமைபற்றி சிகரெட் பெட்டியிலேயே அச்சிட்டும்கூட, கவலைப்படாமல் சிகரெட் வியாபாரிகள் புகையின் மகத்துவம்பற்றி கோடிக்கணக்கில் விளம்பரம் செய்து, புகைஞர்களை ஊக்குவிக்கிறார்கள். வானொலியிலும், தொலைககாட்சியிலும் சிகரெட் விளம்பரங்கள் ரத்து செய்யப்பட்டால், மற்ற எல்லா விளம்பர சாதனங்களையும் முழு ஆற்றலுடன் சிகரெட் வியாபாரிகள் ஆக்கிரமித்துக் கொள்கின்றனர்.

சிகரெட்டின் தீமையைப்பற்றி 9-நாடுகளில் நடைபெற்ற 24-ஆராய்ச்சிகள் அதனால் புற்றுநோய் வருவது பற்றிச் சந்தேகமின்றி எடுத்துக் காட்டியுள்ளன. சிகரெட் வணிகர்களோ சிகரெட் வணிகம் தொடர ஏராளமான பொருட் செலவில் பெரிய விஞ்ஞானிகளைக்கொண்டு எதிர் ஆராய்ச்சிகள் நடத்துகின்றனர். சிகரெட்டில் உள்ள தார்போன்ற பொருள் புற்றுநோய் வரத் துணை புரியக் கூடும் என்று முடிவு அறிவிக்கப்பட்ட பின்பு 'பில்டர்' சிகரெட்டை அறிமுகப்படுத்தினார்கள். பில்டர் சிகரெட்டால் எந்தத் தீமையும் குறையவில்லை என்று விஞ்ஞானிகள் அறிவித்து விட்டார்கள்.

விஞ்ஞானிகளின் முடிவுகளையே மறுபரிசீலனை செய்ய புதிய விஞ்ஞானக் குழுக்களை வியாபாரிகளே ஏற்படுத்தி -'சிகரெட் ஒன்றினால்தான் புற்றுநோய் வருகிறது என்று சர்வ நிச்சயமாக நிரூபிக்கப்படவில்லை; அப்படியே தீமையிருந்தால் தீமை குறைவான சிகரெட்டுகளைத் தயாரிக்க முயல்வோம்' என்று பிரபல விஞ்ஞானிகளைவைத்து சொல்லவைக்கிறார்கள்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

வியாபாரிகளை விட அரசாங்கங்களும் சிகரெட் தொடர மறைமுக ஆதரவு காட்டுகின்றன. சிகரெட் எதிர்ப்பு விளம்பரங்கள் செய்வதெல்லாம் கண்துடைப்பு வேலை தான். காரணம் கோடிக்கணக்கில் வரிப்பணத்தை அரசு கருவூலங்கள் சிகரெட்டால் ஈட்டி வருகின்றன. பல 3-ஆம் உலக நாடுகளுக்குப் புகையிலை ஏற்றுமதி பெரும் அந்நிய செலாவணியை அளித்து வருகிறது.

புகைஞர்கள் மனம் திருந்தினாலன்றி, இன்றைய நிலையில் சிகரெட்டை உலகத்தைவிட்டு ஒழிப்பது கடினம்.

—உலகப்பன்

## நமது தண்ணீர் மருத்துவம்

நமது உடல் 80% தண்ணீரால் ஆனது. உலகமும் சுமார் 80% நீரால் ஆனதுதான். உடலில் 10% நீர் குறைந்தால் நலம் கெடுகிறது. 20% குறைந்தால் உயிர் போகிறது.

தாகம் எடுத்தால் மட்டுமே நீர் அருந்த வேண்டும் என்பது சரியல்ல. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் குறைந்தது 8 டம்ளர் நீராவது அருந்த வேண்டும். தண்ணீர் போதிய அளவு பருகாவிட்டால் மூத்திரக்காயின் இயக்கம் பாதிக்கும்; நீர் குறைந்து அதிலுள்ள உப்புக்கள் கல்லாகி சிறுநீரகத்தில் தங்கும். மலம் கெட்டியாகி மலச்சிக்கல், மூல நோய்கள் ஏற்படும்; தலைவலி, நரம்புத்தளர்ச்சி, பசியின்மை ஏற்படும்.

தண்ணீர் அடிக்கடி பருகுவதால் ஏற்படும் நன்மைகள்:— உணவு சரியாக செரிக்கும், சுரப்பிகள் தூண்டிவிடப்பட்டு நன்றாகச் சுரக்கும், இரத்தம் உடலெங்கும் பரவும், உடலின் நச்சுப் பொருட்கள் கண்ணீர், வியர்வை, சிறுநீராக வெளியேறும்; சருமம் பளபளக்கும்; எலும்பு பலப்படும்.

காலரா நோய் வந்து வாந்தியெடுப்பவர்கள், நீர் அளவு உடலில் குறைந்தே இறக்கிறார்கள். வயிற்றுப் போக்கால் இறப்பு ஏற்படுவதற்கும் இதுவே காரணம். இந்நிலைமையில் நிறைய நீர் பருகினால் சாவிலிருந்து மீள முடியும்.

கடும் காய்ச்சல் ஏற்பட்டு அதிக கெடுதல்கள் நேராமலிருக்க தண்ணீர் அடிக்கடி பருகுவது மிகவும் உபயோகமானதாகும்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

தினம் 8 டம்ளர் தண்ணீர் பருகுவது பல டானிக்குகளின் அவசியத்தை நீக்கும். ஆனால் பருகும் நீர் சுத்தமாக இருக்க வேண்டியது மிக முக்கியம். 90% நோய்கள் தண்ணீரால்தான் வருகின்றன. தண்ணீரை (100%) கொதி நிலைக்குக் காய்ச்சி குளிரவைத்து பின் பருகுதல் மிகவும் அவசியம். வெறும் துணியால் வடிகட்டிக் குடிப்பதால் எந்தப் பயனும் இல்லை; எந்தக் கிருமியும் போகாது. தற்போது கடைகளில் விற்கும் Candle Filter எனப்படும், ஒருவகை மண்ணால் செய்யப்பட்ட குழல் வடிகட்டிகள் வழி தண்ணீரைச் சுத்தம்செய்து வருவதும் சரியானதே!

(அடுத்து நமது எலுமிச்சை மருத்துவம்) —சித்தன்

# புடவைப் பொருளாதாரம்

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் புடவைகளை எல்லா பெண்களுக்கும் வழங்கினால்கூட, ஒருபுடவைகூட இல்லா பெண்கள் இலட்சக்கணக்கில் இருப்பார்கள்.

ஆனால் ஒருபக்கம் எவ்வளவு விரயம் நிகழ்கிறது என்பதை அலுவலகத்தில் பணிபுரியும் பெண்களிடம் நடத்தப்பட்ட புள்ளி விவரம் சராசரியாகக் காட்டுகிறது.

1) பணிக்குச் செல்லும் பெண்கள் ஆண்டு ஒன்றுக்கு வாங்கும் புடவைகள் :-

விலை உயர்ந்தவை : 5 மலிவானவை : 10

[மதிப்பு 5 × ரூ. 250 + 10 × ரூ. 100 = ரூ. 2250]

2) இதில் அவர்கள் முழு அளவில் பயன்படுத்துபவை:-

விலை உயர்ந்தவை : 2 மலிவானவை 5

[மதிப்பு : 2 × ரூ. 250 + 5 × ரூ. 100 = ரூ. 1000]

3) ஓரிரு முறைகள் மட்டும் பயன்படுத்திவிட்டுப் பின்னர் பெட்டியில் பத்திரமாக வைக்கப்பட்டு மக்கிவீணாகும் புடவைகள் :-

விலை உயர்ந்தவை : 3 மலிவானவை : 5

[மதிப்பு 3×ரூ. 250+5× ரூ. 100 =ரூ. 1250]

சராசரி நடுத்தரவர்க்க வேலைக்குச் செல்லும் பெண்மணி புடவை வாங்கும் செலவினங்களுக்காக ஆண்டு ஒன்றிற்கு ரூ. 1000க்கும் அதிகமாகப் பொருள் விரயம் செய்

FREE E- BOOKS , www.thamizham.net.,

கிறாள். உண்மையில் இது மிகக் குறைந்த மதிப்பீடே, ஏனெனில் தினம் ஒருபுடவை உடுத்தி நிறம் சிறிது மங்கியதுமே அவற்றை உடனடியாகப் பாத்திரங்களாக உருமாற்றம் செய்துவிடும் பெண்கள் 20-பேருக்குமேல் உள்ளனர். அம்மாதிரிப் பெண்கள் ஆண்டுக்கு ரூ. 3000 வரை வீணாக்குகின்றனர்.

ஒரு பெண்மணி தன் 30 ஆண்டு பணிக்காலத்தில் (30 ரூ. 1000) வட்டி உட்பட ரூ. 50,000ஐ புடவைகள் வாங்குவதில் வீணாக்கிவிட்டுத் தேவையில்லாத ரூ. 2000 மதிப்புள்ள பாத்திரக் குப்பைகளை வீட்டில் முடக்குகிறாள்.

புடவை, பாத்திர நகைப்பைத்தியம் இந்தியப் பெண்களை பேதலிக்க வைத்துள்ளது.

—வீயெம்

## அழுக்குத் திரைக்குள் ▶ கவிஞர் வைரமுத்து

"சில நூற்றாண்டுக்குத் தேவையான மையை
என் சின்னப் பேனாவில் சேமித்திருக்கிறேன்"

இந்த பெருமிதம் வைரமுத்துவினுடையது. ராக்கெட்டை ரட்சிக்கும் வேக ஓட்டம் இவரின் சிறப்பு. ஒரு கவிஞனுக்கு இருக்க வேண்டிய இன்னொரு குவாலிஃபிகேஷன் செருக்கு. அது வைரமுத்துவிடம் அதிகமாகவே படிந்து இருக்கிறது.

"என் பேனா பிரபஞ்சத்தின் கையில்
தூரிகையாயிருக்கிறது".

இப்படிப்பட்ட கர்வத்தோடு நாம் கைகுலுக்குகிறோம். ஆனால்...

"மரபு தெரிந்த இளைஞர்களே என் பின்னால் வாருங்கள்" என்று கர்வம் மமதையாக மாறுகிறபோது கண்டிக்கிறோம்.

வைரமுத்து மரபில் நன்றாகவே காலூன்றி இருக்கிறார் 'வைகறை மேகங்களில்'. புதுக்கவிதை உத்திகள் மரபிலும் தூவப்பட்டிருக்கிறது. 'பழைய பனை ஓலைகளில்', அவர் கூற்றுப்படியே பலரின் தாக்கம் சற்றுத் தூக்கலாகவே தென்படுகிறது. 'கவிராஜன் கதை' விஸ்தார வரிகளின் வித்து. பாரதிக்கு இவர் போர்த்தி விடுகிற பொன்னாடை

FREE E- BOOKS , www.thamizham.net.,

**வீட்டு வேலைக்காரர்கள்!**


வீட்டு வேலைக்காரர்களுக்கு டில்லியில் மாதத்திற்கு சராசரி ரூ88.25 சம்பளமும், மராட்டியத்தில், ரூ80.34ம், கல்கத்தாவில் ரூ66.52ம், கர்நாடகத்தில் ரூ36.98ம், கேரளத்தில் ரூ28ம், பீகாரில் ரூ26ம், தரப்படுகிறது. தமிழகத்தில் வேலைக்காரரின் சராசரி சம்பளம் ரூ27.72. —பானுமணாளன்

நமக்கும் பட்டாடையாக பயன்படுகிறது.

சமூகத்தைச் சாடுகிறபோது, துப்பாக்கியாய் துலங்கும் இவர் எழுத்து காதலைக் காட்டுகிறபோது அனிச்ச மலராய் அவதரிக்கிறது,

'காதல் காது குடைந்து போட்ட கோழி இறகுகூட
மயிலிறகுக்கான மரியாதைக்குரியது'

கோழி இறகின் பதவி உயர்வை மேற்சொன்ன வரிகள் பட்டவர்த்தனமாய் புலப்படுத்துகின்றன.



'கையெழுத்துப் போடுகிற போது தவிர நான் பேனா எடுக்கும் ஒவ்வொரு நிமிஷத்திலும் உணர்ச்சி வசப்படுகிறேன்.'

இந்த சுயவிமர்சனம் எத்தனை சுகந்தமாயிருக்கிறது? இவரது உரைநடை கூட இரத்தின இரதங்களாய் என்இதய ரஸ்தாக்களில் சுவடு பதிக்கிறது.

இப்படிப்பட்ட விசாலமான சிந்தனையாளன் திரை உலகால் திருடப்பட்டு விட்டான். வைரமுத்துவை சகல மட்டங்களுக்கும் அறிமுகப்படுத்தியது சினிமா மீடியா, ஒத்துக் கொள்கிறேன். அதற்காக வைரமுத்து கமர்சியல் கட்டிலில் கண்ணுறங்க வேண்டுமா? பிரபஞ்சத்தை பார்க்க வேண்டிய வைரமுத்து ஜன்னலுக்குள்ளேயிருந்து ஏன் பெரிய மனிதர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.....?

வைரமுத்து ஆல்ப்ஸ் மலைதான். அது மணற்குன்றாய மாறிககொண்டிருக்கிறதே......

'மக்களைச் சுருள வைக்கும் திரைப்படச் சுருளை
எல்லாம் ஒரு தீக்குச்சிக்கு தின்னக்கொடுப்போம்,

என்ற அக்கினி வரிகளை அளித்த வைரமுத்து அதே அழுக்குத் திரைக்குள் தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்வதேன்........?

—புதுவிழிகளில் நா. தென்னிலவன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

| | | |
|---|---|---|
| வெற்றியின் ரகசியங்கள் | — அகிலன் | —11.00 |
| சேற்றில் மனிதர்கள் | — ராஜம் கிருஷ்ணன் | —14-00 |
| வால்காவிலிருந்து கங்கைவரை | — ராகுல்ஜீ | —20-00 |
| பொதுவுடைமை தான் என்ன? | — ராகுல்ஜி | — 2-50 |
| ஸ்டாலின் | —Dr. S. இராமகிருஷ்ணன் | — 9.00 |
| தூக்கு மேடைக்குறிப்பு | — ஜூலியஸ் பூசிக் | — 6-00 |
| புரட்சி | —நேதாஜி சுபாஷ் சந்திர போஷ் | 1-50 |

**தமிழ்ப் புத்தகாலயம்**

58, டி.பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி
சென்னை-600005

# எந்த ஐயத்திற்கும் பதில்

*கட்டி பதிலளித்த சில கேள்விகள்?*

* நான் எந்த மதத்தையும், சாதியையும் சாராமல் இருக்க முடியுமா? சட்டப் பூர்வமான விளக்கம் சொல்லுங்கள்.
* சீயல்வஸ்ஸில் பணம் கட்டுவது பாதுகாப்பானதா?
* 2 ஆண்டுகளாக மலச்சிக்கலால் அவதிப்படுகிறேன். தீர்க்க வழி சொல்லுங்கள்.
* SITUATIONAL ENGLISH—by Longman — இப்புத்தகம் எங்குக் கிடைக்கும்?
* தூக்கத்தில் தினம் விந்து வெளிப்படுகிறது. இது ஆபத்தானதா?
* நான் ஒரு தொழுநோயாளியைத் தொட்டேன். தீங்கு நேருமா?
* புதிய மாத இதழ் தொடங்கும் வழி முறைகள் என்ன?
* வெளிநாட்டிலிருந்து ஓர் இயந்திரம் தருவிக்க வேண்டும். அதன் வழிமுறைகள் பற்றி விளக்கம் தாருங்கள்.

இது போல உங்கள் ஐயம் எதைப்பற்றியாயினும் இரண்டே ரூபாய் செலவில், பதில் பெறுங்கள் அந்தத்துறை நிபுணர்களிடமிருந்து பதில் பெற்று உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம்.

கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 வீதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள்.

"கட்டி பதிலாளர்குழு" 1494, அண்ணாநகர், சென்னை-600 040.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# பி.காம் மாயை

"என் மகனுக்கு பி.காம். சீட் கிடைத்து விட்டது". கல்லூரியில் மாணவனைச் சேர்க்கவந்த தந்தை ஒருவர் தன் வாழ்வின் இலட்சியத்தைப் பூர்த்திசெய்து விட்டதாக நினைந்து ஆனந்தப் புளகாங்கிதத்தில் உதிர்த்த வார்த்தைகளே இவை. மகனும் சகதிக்கப்பாறபட்ட ஒன்றை தந்தை அளித்து விட்டதாக ஆனந்தமடைகிறான். சென்னைப் பல்கலைக் கழகம் மட்டும் கல்லூரிகள் மற்றும் அஞ்சல்வழிக் கல்வி நிலையம் மூலம் ஆண்டுககு 4000க்கும் மேற்பட்ட பி.காம் பட்டதாரிகளை உற்பத்தி செய்கிறது. தமிழகத்தின் இதர பல்கலைக் கழகங்களையும் சோத்தால் எண்ணிக்கை இட்டிக்கும் என்பதில் ஐயமில்லை. இவர்களில் 25%க்குக் குறைவானவரே வேலை வாய்ப்பும் உயர் கல்வியும் பெறுகின்றனர். இந்தக் கேவலமான சூழலில் பி.காமுக்கு ஏன் இந்த அர்த்தமற்ற மோகம்?

எந்த வேலைக்கோ உயர் கல்வி, தொழிலியல்கல்வி இவற்றுக்கோ பி.காம் நிச்சயம் ஒரு பாஸ்போர்ட் அல்ல. வங்கி, ஆயுள் இன்சூரன்ஸ் நாட்டுடைமை ஆக்கப்பட்ட தருணத்தில் கணக்கியல், நிர்வாகம் இவற்றை முறைப்படி பயிற்றுவித்த பி.காமுக்கு வேலை உயர்கல்வி வாய்ப்புகள் மிக அதிகம் என பெற்றோரும் மாணவரும் தவறாகக் கணித்து விட்டனர். (I.C.W.I., C.A.) போட்டித் தேர்வுகள் இவற்றில் பி.ஏ., பி.எஸ்.சி., பட்டதாரிகள் வியககத்தக்க அளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர். உண்மை நிலை இப்படியிருக்க பி.கா-மிற்கு மிகப் பிரகாசமான எதிர்காலமுள்ளது என தனியார் நிர்வாகங்கள் ஒரு பிரமையை மககள் மத்தியில் ஏற்படுத்தி ஒரு சீட்டுக்கு ரேட்டு 6000-என பி.காமை கடைச் சரக்காக்கிவிட்டன. கல்வி மனவளர்ச்சிக்கே ஊழலுக்கு வித்திட்டு தனியார் கொடுப்பதற்கு அல்ல என்ற பகுத்தறிவு பூர்வமான சிந்தனை அழிந்துவிட்டதும் மருத்துவம், பொறியியல் போன்ற தொழிலியற் கல்வி விலை உயர்ந்தவையாக இருப்பதாலும் பி.காமை ஆலையில்லா ஊரின் இலுப்பைப் பூவாக்கி விட்டன. நமது கலப்புப்

FREE E- BOOKS , www.thamizham.net.,

பொருளாதாரத்தில் நிர்வாகத்திற்கு பி.காம் தேவைதானென்றாலும் நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையான வல்லுநர்கள் விஞ்ஞானிகள், பொறியியல் நிபுணர்கள் இவர்களைவிட தேவைக்கதிகமான பி.காம்களை உற்பத்திசெய்து முரண்பட்ட வளர்ச்சியை உருவாக்கிவிட்டோம். இல்லாத ஊருக்குப்பயணச் சீட்டு வாங்கி தவறான பயணம் செய்யும் இந்த அவலம் மாற என்னவழி? பணமூட்டையடிக்கும் தனியார் கல்லூரிகளுக்கு பல்கலைக் கழக அனுமதி வாபஸ் பெறப்படவேண்டும். மற்றெந்த டிகிரியைப்போல் பி.காமும் ஒரு சாதாரணமான டிகிரிதான் என்ற இயக்க ரீதியான மன மாற்றத்தை மாணவர், பெற்றோர் மத்தியில் அரசும், பல்கலைக்கழகமும், எல்லா சாதனங்கள் மூலமும் ஏற்படுத்த வேண்டும்.

—கார்த்திக்

## பிரதமரின் ஆசி பெற்ற புதுச் சாமியார்

# சடாச்சாரி

"டில்லியில் நடககும் எதுவும் என் முடிவுப்படியே நடக்கிறது. முககிய அரசியல் முடிவுகளை நானே எடுக்கிறேன், எந்த அரசியல் வாதியும் என்னைககலக்காமல் முடிவு எடுப்பதில்லை. காரணம் அவர்கள் எல்லாம் வல்லவர்கள் அல்ல" இப்படிக் கூறுகிறார் பிரபலமாகி வரும் புதுசாமியார் சடாச்சாரி.

தீரேந்திர பிரம்மச்சாரி சாமியார் சிவா துப்பாக்கித் தொழிற்சாலை வியகாரத்தில் மாட்டிக் கொண்டு கைதாகி, தேய்ந்து போய்விட்டார். அவருக்குக் குழி தோண்டியவர் தான் இந்த 46 வயது புதுசாமியார் சடாச்சாரி. தற்போது இந்திரா காந்தியையும், பிரபல அரசியல் தலைவர்களையும் இவர் மயக்கி கைககுள் போட்டுக் கொண்டு நாளுக்கு நாள் தன் செல்வாக்கை தலை நகரிலும், உலக நாடுகளிலும் பெருக்கி வருகிறார்.

தான் தான் இந்திராவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வந்ததாக இவர் கூறுகிறார். "நான் யாகங்கள் பல நடத்தி அவர் பதவியை மீட்டேன் ஜனதா கட்சி மறையச் செய்தேன்" என்கிறார். இந்திராவுக்கு இவர்

FREE E- BOOKS , www.thamizham.net.,

4 மாலைகள் தந்திருக்கிறாராம். 2 உத்திராட்சை, 2 மோடி. மாறி மாறி இந்திரா இவற்றைப் பயன்படுத்துகிறாராம். இவரது இந்த மாலைகளே எதிரிகளிடமிருந்து இந்திராவைக் காப்பாற்றுவதாக சாமி சொல்கிறார். "நான் இந்திராவின் மகன். அவரைப் பார்க்க எனக்கு அனுமதி தேவையில்லை. எனக்கு டில்லியில் 2 வீடுகள் உண்டு. ஒன்று என் ஆஸ்ரமம்-மற்றொன்று பிரதமரின் இல்லம். திருமதி காந்திக்கு என்மேல் அபார அன்பும் மதிப்பும் உண்டு" என்கிறார்.



சாயிபாபா, தீரேந்திர பிரம்மச்சாரி, ரஜினீஷ், மகரிஷி மகேஷ்யோகி போன்ற ஆசாமிகளையெல்லாம் விழுங்கி ஏப்பம் விட்டு விடுவது போல இவர் நடவடிக்கை இருந்து வருகிறது. "ஜென்டில்மென்" ஆங்கில மாதவிதழுக்கு இவர் அளித்த பேட்டியொன்றில் குறிப்பிடும் விஷயங்கள் தலையைச் சுற்றுகின்றன.

இந்திரா காந்தி மட்டுமன்றி உலகத்தின் 90 நாட்டு தலைவர்களையும் தன் சொற்படி நடக்க வைக்கிறாராம். ரீகன் வெற்றி பெற இவர் தான் உதவினாராம். மார்க்கரெட் தாட்சர் இடைத் தேர்தலை நடத்தும்படி அறிவுரை கூறி ஒப்புக் கொள்ள வைத்தாராம். உலகத்தில் முக்கிய தலைவர்களோடு தனக்குள்ள தொடர்புகளை பகிரங்கமாக அறிவிக்கும் இந்த சடாச்சாரி, சோவியத் பிரதமர் பற்றி இப்படிக் குறிப்பிடுகிறார்: "ப்ரெஸ்னேவ், கடவுளை நான் நம்பவில்லை என்று வாதிட்ட போது என் சக்தியால் அவரை எரித்தேன். அவர் உடல் முழுவதும் தீப்பற்றி எரிந்

சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ 5/ உடன் உங்களுக்கு செய்ய வேண்டிய பணிகளின் விவரத்தை தெரிவிக்க வேண்டிய முகவரி :
மைதிலி மோகன், 27—பி திருவள்ளுவர் தெரு, இராமபுரம் அம்பத்தூர், சென்னை-600 053.

FREE E- BOOKS , www.thamizham.net.,

தார். நம்பிக்கையடைந்தார். மார்க்சியத்தை மறந்தார். சாவைத் தழுவினார்" என்று உருக்கமாக கதைக்கிறார்.

பகுத்தறிவாளர் அபிரகாம் கோவூர் இவரைச் சந்தித்து 'நான் அதிசயங்களை நம்புவதில்லை' என்றாராம். இவர் பல அதிசயங்களைச் செய்து காட்டியவுடன் இவர் பாதத்தைத் தொட்டு வணங்கினாராம். "கோவூர், தான் கடவுளைக் கூட நம்புவதில்லை என்று கூறியவுடன் நான் அவரைத் தண்டித்தேன். என் கண்களிலிருந்து நெருப்பு வெளியேறி அவர் உடலைச் சுட்டது. கோவூரின் ஒவ்வொரு அங்கமும் தீப்பற்றி எரிய அவர் குதித்து, அழுது உதவி கேட்டு மன்றாடினார் அவர் படும் வேதனையைக் கண்டு நான்" அம்ரிபீஜ் "மந்திரத்தைச் சொல்லி அவரைக் காப்பாற்றினேன்" என்கிறார்.

பகுத்தறிவுவாதியான ஜவகர்லால் நேருவின் மகள் இந்திராவும், பிரபல அரசியல் தலைவர்களும் இந்த மாதிரி சரடுவிடும் சாமியார்களைப் பேணிக்காப்பதும், வளரவிடுவதும், அருவருப்பான தொடர் கதையாகி வருகிறது.

ராஜ் நாராயணன் கூறுகிறார்: சுவாமி சடாச்சாரிக்கு ஒன்றும் தெரியாது. திரேந்திர பிரம்மச்சாரிக்காவது ஏதாவது கொஞ்சம் தெரியும். ஒருமுறை சடாச்சாரியாரிடம் ஒரு சமஸ்கிருத ஸ்லோகத்திற்கு விளக்கம் தரச் சொன்னேன். அவர் திணறிப்போனார். மறுநாள் தனது புத்தகத்தை படித்துவிட்டு விளக்கம் சொல்வதாகப் போனவர் தான். இதுவரை திரும்பி வரவேயில்லை."

அரசியல் கோமாளி என்று கேலி செய்யப்படும் ராஜ் நாராயணன் கூட இவரை மூன்றே நிமிடத்தில் எடைபோட்டு வேஷத்தைக் கலைத்திருக்கிறார். ஆனால் பல ஆண்டுகள் இந்த சடாமுடிதாரிகளோடு பழகும் பல அரசியல் ஞானஸ்தர்களுக்கு, இவரின் மயக்கம தெரியவில்லை. 5'4" உயரமும், பீப்பாய் மாதிரி உடலும், தங்க ரீகோ கைக்கடிகாரமும் சிவப்பு அங்கியும் கொண்ட இந்த சடாச்சாரி நினைத்த போது விமானத்தில் பறக்கிறார். இதற்கு சக்தி தவ வலிமையால், முக்கடவுள் அருளால் அல்ல; அம்மையார் தயவால் தான்! எந்த அளவு போகிறார் பாருங்கள் இந்தப் புது ரஸ்புதின் :-

ரஸ்புதின் மகாத்மா காந்தி, சாணக்கியர் மாதிரி ஒரு புனித ஆத்மா தான். நானும் ரஸ்புதின் மாதிரிதான்"

—எழில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

**சுட்டி சந்தா விபரம்:**

- சுட்டி ஒவ்வொரு மாதமும் தவறாமல் முதல் தேதி வெளிவருகிறது.
- 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00 மட்டுமே.
- எல்லாத் தொடர்புகளுக்கும் : ஆசிரியர் குழு, சுட்டி, அண்ணாநகர், சென்னை-600 040.

**சுட்டி முன் இதழ்கள் :**

இதழ் எண்கள் 1 முதல் 7, 19, 21, 22 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 35 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டி விற்பனையாளர்கள்**

சுட்டி இன்னும் விற்பனையாகாத எல்லா இடங்களிலும் தேவை. எளிய விதிமுறைகள்; தரமான கமிஷன்; சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமையுண்டு.

**சுட்டி இலவசம் :**

சுட்டியைப் படிக்காத நண்பர்கள் இருப்பின் அவர்களுக்குச் சுட்டியை எங்கள் செலவில் இலவசமாக அறிமுகப்படுத்தலாமே! சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவர் எனில், அவர் முகவரியைத் தாருங்கள். உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் அவருக்குக் கிடைக்கச் செய்கிறோம்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

**சுட்டியில் விளம்பரம்**

செய்து பயனடையுங்களேன். மாதந்தோறும் பல்லாயிரக்கணக்கான விழிப்பான வாசகர்கள் சுட்டியைப் பார்க்கிறார்கள்; பரிமாறுகிறார்கள்; விவாதிக்கிறார்கள். பலரும் பாதுகாக்கிறார்கள். நல்ல விளம்பரங்களுக்கு உரிய பத்திரிகை சுட்டி!

சுட்டியில் மலிவு வரி விளம்பரமும் செய்யலாம். வரி விளம்பரங்களுக்குக் கட்டணம் வரிக்கு ரூ5 -மட்டுமே.


✳ மது, சிகரெட்டு, பெண்களைப் போகப் பொருளாகக் காட்டி விற்பனை செய்யும் கவர்ச்சி விளம்பரங்கள் போன்றவை சுட்டியின் வெளியிடுவதற்கில்லை.

**சுட்டி இம்மாதம் வந்து சேரவில்லையா?**

ஒவ்வொரு மாதமும் முதல் தேதிக்குள் கிடைக்குமாறு சந்தாதாரர்களுக்கு சுட்டி அனுப்பப்படுகிறது. சந்தா முடிய ஒரு மாதம் முன்பும், சந்தா முடியும் மாதமும் (உடன் பணவிடைத் தாளும் இணைக்கிறோம்) அஞ்சல் உறையின் மேல் உங்களுக்கு அறிவிப்புச் சீட்டு ஒட்டப்படுவதைக் கவனிக்க மறவாதீர்கள். அப்படியும் சந்தா அனுப்புவோருக்கே சுட்டியை நிறுத்த நேர்கிறது.

சந்தா முடிய காலமிருந்தும் 15 தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறாதவர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம். சில சமயம் அஞ்சலில் தவறுவது என்ன நடவடிக்கை எடுத்தும் தவிர்க்க முடியாதிருக்கிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: நாராயண பாரதி. வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன், 1494, அண்ணாநகர், சென்னை-40. அச்சிடுவோர்: J. S. [illegible] இருதய பிரிண்டர்ஸ், 96. [illegible] சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002.

FREE E- BOOKS , www.thamizham.net.,

[illegible] 1984 Regd. No. TN/MS(N)/317
to post without prepayment Licence No TN/MS(N)WPP 58

http://www.thamizham.net
FREE E- BOOKS (TAMIL)

# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiarey sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E- BOOKS , www.thamizham.net.,